**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 134/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 2 |
| Name : | திருமதி. சுசிலா (தலைமை காவலர்) |
| Father's/Husband Name: | திரு. வேல்மணி |
| Village : | அனைத்து மகளிர் காவல் நிலையம், பெரம்பலூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

i) நான் தற்போது பெரம்பலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.11.2020ம் தேதி அன்று பெரம்பலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக சித்ரா என்பவர் பணியிலிருந்தார். அவர் தற்போது பணிமாறுதல் பெற்று வேறு காவல் நிலையத்தில் பணி செய்து வருவதாலும் தரப்பினர் தங்களுக்குள் சமாதானம் ஆகிவிட்டதாலும் இவ்வழக்கை விரைந்து முடிக்க வேண்டி மேற்படி நபருக்காக கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.11.2020ம் தேதி அன்று உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பிலிருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று அதனை பரிசீலனை செய்து அதன் தன்மைக்கேற்ப பெரம்பலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண் 21/2020 இதச பிரிவுகள் 294(b), 323, 498(A), 506(1) ன்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அ.சா.1 கொடுத்த புகார் அ.சா.ஆ2**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது. நிலையத்தில் பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் உதவி ஆய்வாளர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் கணேசன், வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை **முறையே பார்வை மகஜர் அ.சா.ஆ4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் புனிதா, முத்துலெட்சுமி, செல்லம், அமுதா, கணேசன், வெங்கடேசன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் மாண்புமிகு பெரம்பலூர் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளதால் அவர்களை கைது செய்யவில்லை. சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323, 498(A), 506(1)ன்படி கடந்த 20.02.2021ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த பொய் புகாரை சரியாக விசாரணை செய்யாமல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு செல்லாமலேயே அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.